நகராட்சி அலுவலகம்,
பெரியகுளம்.
நாள். 19.07.2021.

## மன்றக் கூட்ட அறிவிப்பு

2021ம் ஆண்டு ஜுலை மாதம் 19ம் நாள். 19.07.2021 பிலவ வருடம் ஆடி 3ம் நாள் திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் கீழ்கண்ட பொருட்கள் பற்றி முடிவு செய்ய மன்ற சாதாரணக் கூட்டம் நடைபெற்றது.

1. **பொருள் :–** இந்நகராட்சி ஆணையாளர் திரு.ர.அசோக்குமார் அவர்களின் ஜுன் 2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.கஎண். 468/2020/சி1)

**தீர்மான எண்:** 1115

**தீர்மானம்** : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

2. **பொருள் :–** இந்நகராட்சி பொறியாளர் திருமதி.ந.சண்முகவடிவு அவர்களின் ஜுன் 2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.கஎண். 573/2020/சி1)

**தீர்மான எண்:** 1116

**தீர்மானம்** : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

3. **பொருள்:–** தேனி மாவட்டத்தில் அமைந்துள்ள பெரியகுளம் நகராட்சி 1886 ஆம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக உருவாக்கப்பட்டு பின்னர் 1966ம் ஆண்டிலிருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. பெரியகுளம் நகராட்சி மேற்கு மலை தொடர்ச்சியின் வராக நதிகரையில் அமைந்துள்ளது. இந்நகரின் மொத்த பரப்பளவு 2.11 சதுர கி.மீட்டர் ஆகும். இந்நகராட்சி 30 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்நகரின் மொத்த மக்கள் தொகை 42976 ஆகும்.

இந்நகராட்சிக்கு குடிநீர் ஆதாரமான கொடைக்கானல் பேரிஜம் ஏரியின் மூலம் தண்ணீர் சோத்துப்பாறை அணையின் மூலமாக தலைமை குடிநீர் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இந்நகராட்சி பகுதியில் மாவட்ட தலைமை மருத்துவமனை , மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றம், தாலுகா அலுவலகம், மாவட்ட கல்வி அலுவலகம், நூலகங்கள் அமைந்துள்ளது. மாணவர்கள் கல்வி கற்க நகராட்சி மற்றும் தனியார் பள்ளிகள் மொத்தம் 27 எண்ணிக்கையில் அமைந்துள்ளது. பெரியகுளம் நகராட்சியில் மொத்தம் 10960 எண்ணிக்கையில் வரியின குடியிருப்புகள் அமைந்துள்ளது. மேலும் இந்நகராட்சியினை தேனி அல்லிநகரம் நகராட்சியுடன் இணைத்து மாநகராட்சியாக தரம் உயர்த்துவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் வழியாக அரசை கேட்டுக் கொள்ள உரிய பிரேரணையை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2420/2007/எப்1)

**தீர்மான எண்:** 1117

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

4. <u>பொருள்:–</u> பெரியகுளம் நகராட்சியில் 2020–2021ம் ஆண்டு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டத்தின் கீழ் ரூ.284.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை [MC.2] அரசாணை எண்.40 நாள்.05.02.2021ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி மேற்படி திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதை மக்கள் செய்தி தொடர்பு அலுவலர், தேனி அவர்கள் மூலமாக மாவட்ட அளவிலான மாலை முரசு நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்காக விளம்பரக் கட்டணத் தொகை ரூ.17,562/–யினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.கஎண். 831/2020/இ1)

**தீர்மான எண்: 1118**
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

5. <u>பொருள்:–</u> பெரியகுளம் நகராட்சியில் 15–வது மாநில நிதிக் குழு 2020 – 21 பரிந்துரையின் பேரிலான பிணை மான்யத் திட்டத்தின் கீழ் (Tied Crant) முதல் மற்றும் இரண்டாம் உத்தேச மானியத்தில், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 17.11.2020–ம் நாளிட்ட ந.க.எண். 20452 / 2020 / LA2 கடிதத்தின் சுற்றறிக்கை வெளியிட்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி கீழ்கண்ட விபரப்படியான பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மான எண்.1021 நாள்.07.01.2021ல் அனுமதி பெறப்பட்டது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | தேனி அல்லிநகரம், பெரியகுளம் மற்றும் போடி நகராட்சிகள் பயன்பாட்டிற்கு 30 டன் கொள்ளளவு புதிய எரியூட்டும் இயந்திரம் வாங்கி பொருத்துதலுக்கான பங்குத் தொகை | 85.56 |
| 2. | இந்நகராட்சி வைகை அணை சாலையில் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் கரிமக் கழிவுகள் அரைக்க புதிய அரவை இயந்திரம் வாங்குதல் | 7.00 |
| 3. | இந்நகராட்சி வைகை அணை சாலையில் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் புதிய அரவை இயந்திரத்திற்கு அறை அமைத்தல் | 2.76 |
| 4. | இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இரண்டு எண்ணம் இலகுரக வாகனங்கள் (LCV) வாங்குதல் | 15.00 |
| | **மொத்தம்** | **110.32** |

மேற்படி பணிகளில் வ.எண்.4 திடக்கழிவு மேலாண்மைக்கு புதிய இரண்டு எண்ணிக்கைகள் இலகு ரக வாகனம் வாங்கும் பணிக்கு ரூ.14.30 இலட்சத்திற்கு மட்டுமே நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது செயல்முறை ஆணை ந.க.எண்.25160/2020/ப்பி4–3, நாள்.29.01.2021ன்படி நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளமையால் ரூ.0.70 இலட்சம் எஞ்சியுள்ளது. மேலும் வரிசை எண்.1க்கான பணியினை தேனி அல்லிநகரம் நகராட்சி மூலம் மேற்கொள்ள இருந்ததால், அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இந்நகராட்சி பங்குத் தொகை ரூ.85.56 இலட்சத்தினை தேனி அல்லிநகரம் நகராட்சிக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது. தற்போது, மேற்படி பணிக்கு மாற்றாக இதர அத்தியாவசியமான குடிநீர் மற்றும் திடக்கழிவு

மேலாண்மை பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களால் 06.07.2021 அன்று ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. இவ்விரு தொகைகளையும் சேர்த்து ரூ.86.253 இலட்சத்திற்கு கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | தலைமை நீர்த்தேக்க நிலையத்தில் மணல் படுகை சுத்தம் செய்ய புதிய 10 ஹெச்.பி. நீர் மூழ்கி மின்மோட்டார் வாங்கி பொருத்துதல் | 2.00 |
| 2. | எண்டப்புளி கிராமத்திலுள்ள நகராட்சி உரக்கிடங்கிற்கு சுற்றுச்சுவர் கட்டுதல் | 50.00 |
| 3. | வைகை அணை சாலை நகராட்சி மண்புழு உரம் தயாரித்தல் கூடம் மற்றும் வளமீட்பு மையம் ஆகியவைகளுக்கு உட்புறம் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 11.753 |
| 4. | திடக்கழிவு மேலாண்மை பணிக்கு மூன்று எண்ணிக்கைகள் இலகுரக வாகனங்கள் வாங்குதல் | 22.50 |
| | **மொத்தம்** | **86.253** |

மேற்படி, இரண்டாவது கட்டமாக தேர்வு செய்யப்பட்டுள்ள வரிசை எண்.1, 3 மற்றும் 4க்கான பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும், வரிசை எண்.2க்கான பணி மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி பெற்றிட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-

1. மேற்படி வரிசை 1, 3 மற்றும் 4க்கான பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி வரிசை எண்.2க்கான பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெற்றிட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி வரிசை எண்.4ல் உள்ள மூன்று எண்ணம் இலகுரக வாகனங்கள் (LCV) வாங்குவதற்கு உரிய அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
4. 15-வது மாநில நிதிக் குழு 2020 - 21- ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட மானியத் தொகையில் (Tied Crant) பணிகள் மேற்கொள்ளுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.களண். 1894/2020/இ1)

**தீர்மான எண்: 1119**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

6. **பொருள்:–** பெரியகுளம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.06 முதல் 30 வரையிலான 25 வார்டுகளில் தனியார்மயம் மூலமாக 63 தூய்மைபணியாளர்கள் மூலம் சுகாதாரப் பணி மேற்கொள்ள வைப்புத்தொகை செலுத்தியுள்ளார். மேலும் வைப்புத் தொகையானது காலங்கடந்த பதிவேட்டின் பகுதி:II ல் பக்க எண்.21 மற்றும் வரிசை எண்.451 ல் (29.08.2017)ம் தேதியன்று எக்செல் நீட் & டைட்டி ஏஜென்ஸி என்ற பெயரில் ரூ.90000/–மட்டும் பதிவாகியுள்ளது. மேலும் தணிக்கைத்தடை ஏதும் இல்லை என்ற விவரமும், வைப்புத்தொகையானது மூன்று வருடங்களுக்கு மேல் காலங்கடந்த வைப்புத்தொகையாக இருப்பதால் அன்னார்க்கு வைப்புத்தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :-

மன்ற அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 0773/2021/பி3)
**தீர்மான எண்: 1120**
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

7. <u>**பொருள்:-**</u> இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனங்கள் இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் ஐந்து ஓட்டுநர்கள் நியமனம் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரி பணிமேற்கொள்வதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.1098, நாள்.25.02.2021ல் அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் 02.07.2021ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி மேற்படிபணிக்கு கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்த புள்ளிகள் வரப்பெற்றது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விபரம் | குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சியில் தினக்கூலி ஊதிய விகிதத்தில் ஐந்து ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஊதிய விகிதத்தில் பணி மேற்கொள்ளுதல், அரசு விதிகளின்படி ESI, EPF, Insurance & Taxes உட்பட அனைத்தையும் ஒப்பந்தகாரரே மாதந்தோறும் செலுத்தி ரசீது இணைக்க வேண்டும். (ஒப்படைக்கும் நாள் முதல் ஓராண்டு காலம் வரை) | ரூ.9,73,000/- | **1.**Super Neat And Manpower Agency, 17 Eruthukara Street, Thenkarai Periyakulam. தொகை ( 1 நபருக்கு ஒரு நாளுக்கு ஊதியம்) ரூ.569/-<br>**2.**Excell Neat And Tidy Agency, 6 P.T.Rajan Road, B.B.Kulam, Madurai தொகை ( 1 நபருக்கு ஒரு நாளுக்கு ஊதியம்) ரூ.570/- | Super Neat And Manpower Agency, 17 Eruthukara Street, Thenkarai Periyakulam. தொகை ( 1 நபருக்கு ஒரு நாளுக்கு ஊதியம்) ரூ.569/- |

<u>அலுவலகக்குறிப்பு</u> :-

1. மன்றத்தின் அனுமதி பெற்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Super Neat And Manpower Agency, 17 Eruthukara Street, Thenkarai Periyakulam நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.0040/2021/எச்1)**

**தீர்மான எண்: 1121**
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

8. **<u>பொருள்</u>:–** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பள்ளி கல்வித்துறை சார்ந்த கள்ளர் பள்ளி மற்றும் நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் சுகாதாரப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி பணிமேற்கொள்வதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.1099, நாள்.25.02.2021ல் அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் 02.07.2021ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி மேற்படிபணிக்கு கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்த புள்ளிகள் வரப்பெற்றது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை ரூ</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விபரம்</th><th>குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம்</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">பெரியகுளம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பள்ளி கல்வித்துறை சார்ந்த கள்ளர் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் கழிவறை, பள்ளி வளாகம், வகுப்பறைகள், சுத்தம் செய்ய துப்புரவு பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர் கொண்டு தனியார் மூலம் பணிகள் மேற்கொள்ளுதல், நகராட்சி அலுவலர்கள் தெரிவிக்கும் இதர அவசர பணிகள் செய்தல், சீருடை காலணிகள் ,துப்புரவு பணிக்கு தேவையான அனைத்து தளவாட பொருட்கள், பாதுகாப்பு உபகரணங்கள், கிருமி நாசினிகள் வழங்குதல் மற்றும் அரசு விதிகளின்படி ESI, EPF, Insurance & Taxes உட்பட அனைத்தையும் ஒப்பந்தகாரரே மாதந்தோறும் செலுத்தி ரசீது இணைக்க வேண்டும். (ஒப்படைக்கும் நாள் முதல் ஓராண்டு காலம் வரை)</td><td rowspan="2">ரூ.5,10,000/–</td><td>1.Super Neat And Manpower Agency, 17 Eruthukara Street, Thenkarai Periyakulam. தொகை (1 நபருக்கு ஒரு நாளுக்கு ஊதியம்) ரூ.496/–</td><td rowspan="2">Super Neat And Manpower Agency, 17 Eruthukara Street, Thenkarai Periyakulam. தொகை (1 நபருக்கு ஒரு நாளுக்கு ஊதியம்) ரூ.496/–</td></tr>
<tr><td>2.Excell Neat And Tidy Agency, 6 P.T.Rajan Road, B.B.Kulam, Madurai தொகை (1 நபருக்கு ஒரு நாளுக்கு ஊதியம்) ரூ.498/–</td></tr>
</table>

<u>அலுவலகக்குறிப்பு</u> :-

1. மன்றத்தின் அனுமதி பெற்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Super Neat And Manpower Agency, 17 Eruthukara Street, Thenkarai Periyakulam நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தொகையினை இந்நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.0041/2021/எச்1)**

**தீர்மான எண்: 1122**
**தீர்மானம் :** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

9. **<u>பொருள்</u> :–** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பள்ளி கல்வித்துறை சார்ந்த அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் சுகாதாரப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி பணிமேற்கொள்வதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.1099, நாள்.25.02.2021ல் அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் 02.07.2021ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி மேற்படிபணிக்கு கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்த புள்ளிகள் வரப்பெற்றது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விபரம் | குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1. | பெரியகுளம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பள்ளி கல்வித்துறை சார்ந்த அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் கழிவறை, பள்ளி வளாகம், வகுப்பறைகள், சுத்தம் செய்ய துப்புரவு பணியாளர்கள் கொண்டு தனியார் மூலம் பணிகள் மேற்கொள்ளுதல், நகராட்சி அலுவலர்கள் தெரிவிக்கும் இதர அவசர பணிகள் செய்தல், சீருடை காலணிகள், துப்புரவு பணிக்கு தேவையான அனைத்து தளவாட பொருட்கள், பாதுகாப்பு உபகரணங்கள், கிருமி நாசினிகள் வழங்குதல் மற்றும் அரசு விதிகளின்படி ESI, EPF, Insurance & Taxes உட்பட அனைத்தையும் ஒப்பந்தகாரரே மாதந்தோறும் செலுத்தி ரசீது இணைக்க வேண்டும். (ஒப்படைக்கும் நாள் முதல் ஓராண்டு காலம் வரை) | ரூ.6,80,000/– | 1.Super Neat And Manpower Agency, 17 Eruthukara Street, Thenkarai Periyakulam. தொகை ( 1 நபருக்கு ஒரு நாளுக்கு ஊதியம்) ரூ.496/–<br><br>2.Excell Neat And Tidy Agency, 6 P.T.Rajan Road, B.B.Kulam, Madurai தொகை (1 நபருக்கு ஒரு நாளுக்கு ஊதியம்) ரூ.498/– | Super Neat And Manpower Agency, 17 Eruthukara Street, Thenkarai Periyakulam. தொகை ( 1 நபருக்கு ஒரு நாளுக்கு ஊதியம்) ரூ.496/– |

**<u>அலுவலகக்குறிப்பு</u> :-**

1. மன்றத்தின் அனுமதி பெற்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Super Neat And Manpower Agency, 17 Eruthukara Street, Thenkarai Periyakulam நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தொகையினை இந்நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2206/2019/எச்1)**

**தீர்மான எண்: 1123**
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

10. <u>**பொருள்**</u> **:–** பெரியகுளம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் புதிய கட்டிடம் கட்ட அனுமதி கோரும் போது அம்மனைக்கு வைப்புத்தொகை மனுதாரர் செலுத்தியுள்ளார். தற்போது வைப்புத் தொகை காலங்கடந்த பதிவேட்டின் பகுதி: II பக்கம் எண்:98 மற்றும் வரிசை எண்: 378ல் (20.03.2018) தேதியன்று திரு.A.சரவணன் என்ற பெயரில் ரூ.5000/–மட்டும் பதிவாகியுள்ளது. மேற்படி வைப்புத்தொகை மூன்று வருடங்களுக்கு மேல் காலங்கடந்த வைப்புத்தொகையாக இருப்பதால் அன்னார்க்கு வைப்புத்தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :–
மன்ற அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 474/2021/பி3)
**தீர்மான எண்: 1124**
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

11. <u>**பொருள்**</u> **:–** பெரியகுளம் நகராட்சி – பொதுசுகாதாரப்பிரிவு – பெரியகுளம் நகராட்சியில் உருவாகும் குப்பைகளை தரம் பிரித்து சேகரம் செய்து மக்கும் குப்பைகளை பாத்தி (Windrows) அமைத்து உரம் தயார் செய்தும், மக்கிய குப்பையிலிருந்து மண்புழு உரக்குழல் மூலம் மண்புழு உரம் தயார் செய்தும் செயலாக்கம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி தயாரிக்கப்படும் உரங்களை பெரியகுளம் நகராட்சி பகுதியை சுற்றியுள்ள அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில் பின்வருமாறு உரங்களை விற்பதற்கு விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
    1. மண்புழு உரம் (மானிய விலை) கிலோ ஒன்றிற்கு ரூ.3/–.
    2. பாத்தியில் தயாரிக்கப்பட்ட உரம் – (விவசாய) உழவர் அடையாள அட்டை உள்ளவர்களுக்கு இலவசம்.

<u>அலுவலகக்குறிப்பு</u> : –
மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0348/2017/எச்1)
**தீர்மான எண்: 1125**
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

12. <u>**பொருள்**</u> **:–** பெரியகுளம் நகராட்சி – டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகள் – தற்போது மழைக்காலம் துவங்கி விட்டதாலும், கேரளா மாநிலத்தில் ஜிகா வைரஸ் தொற்று பரவி வருவதாலும், டெங்கு காய்ச்சல் தற்போது தேனி மாவட்டத்தில் ஆரம்பித்து விட்டதாலும், மாவட்ட ஆட்சித்தலைவர், தேனி மாவட்டம் அவர்களின் அறிவுரைப்படி முன்னெச்சரிக்கையாக டெங்கு மற்றும் ஜிகா வைரஸ் பரப்பக்கூடிய ஏடிஸ் கொசு ஒழிப்பு களப்பணிகள் செய்ய தேவையான பின்வரும் விபரப்படியாக தெரிவிக்கப்பட்டுள்ள மருந்துகள் மற்றும் களப்பணி உபகரணங்கள் குறைந்த அளவே இருப்பு உள்ளமையால் உடன் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 01 | பைரித்திரம் 2% | : | 200 லிட்டர். |
| 02 | அபேட் | : | 100 லிட்டர். |
| 03 | டெக்னிகல் மாலத்தியான் (Out door Fogging) | : | 200 லிட்டர். |

| | | | |
|---|---|---|---|
| 04 | Cylinder (Fogging Purpose) | : | 400 லிட்டர். |
| 05 | டார்ச் லைட் | : | 20 எண்ணங்கள். |
| 06 | அவுன்ஸ் கிளாஸ் | : | 20 எண்ணங்கள். |
| 07 | கரண்டி | : | 12 எண்ணங்கள். |
| 08 | வடிகட்டி | : | 12 எண்ணங்கள். |
| 09 | திருப்புளி | : | 12 எண்ணங்கள். |
| 10 | ஸ்பான்ச் | : | 12 எண்ணங்கள். |
| 11 | கோனி பை | : | 12 எண்ணங்கள். |
| 12 | பேசில்லஸ் துரிஞ்சின்ஸ் | : | 100 லிட்டர். |

**அலுவலகக்குறிப்பு : –**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினம் தொகை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம்அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.294/2017/எச்1)**

**தீர்மான எண்: 1126**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

13. **பொருள் :–** பெரியகுளம் நகராட்சி – பொது சுகாதாரப்பிரிவு – இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் மக்கும் குப்பைகள் அரைத்து பாத்தி அமைத்து உரம் தயாரிக்க பயன்படும் Organic Pulverizer Tractor–ல் உள்ள கன்வயர் பெல்ட் மிகவும் பழுதடைந்தமையால் குப்பைகள் அரைக்க மிகவும் சிரமமாக உள்ளது. எனவே மேற்படி வாகனத்திற்கு புதிதாக கன்வயர் பெல்ட் வாங்கி பொருத்தவும், கிரீஸ் அடித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் தொகை ரூ.11,000/– (ரூபாய் பதினொன்றாயிரம் மட்டும்) மேற்கொள்ளவும், மேற்படி பணிகளை பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உடன் மேற்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையான பாண்டியன் ஆட்டோ மொபைல்ஸ், பெரியகுளம் நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு : –**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினம் தொகை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.348/2017/எச்1)**

**தீர்மான எண்: 1127**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

14. **பொருள்:–** பெரியகுளம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 2020–21ம் ஆண்டு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்ட நிதியின் கீழ் சாலைப்பணிகள், பொதுக் கழிப்பறை கட்டிடப் பணிகள், புதைவடிகால் பணிகள் மற்றும் குடிநீர் பணிகள் போன்ற அடிப்படை வசதிப் பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( MC2 ) அரசாணை எண். (D) . 40, நாள். 05.02.2021ன்படி ரூ.284.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்ட பணிகளுக்கு 30.06.2021ம் தேதியன்று மறு ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாம் அழைப்பு) கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப உறை திறப்பு மேற்கொள்ளப்பட்டதில் தகுதியானவையாக இருந்தது. அதனடிப்படையில் 14.07.2021ம் தேதியன்று விலை விபர உறைகள் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் கடிதத்தில் விலை குறைப்பு அளிக்கப்பட்டதன்படி ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | இந்நகராட்சி தலைமை குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Clariflocculator பழுது நீக்கி மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.45.00 இலட்சம் | Alchem Industries, 32-A, Ooty road, Mettupalayam | மதிப்பீட்டு விலையை விட 4.95 % அதிகம் | மதிப்பீட்டு விலையை விட 4.90 % அதிகம் |
| | | | Sree Power Engineers, 109, Duraisamy layout,Peelamedu, Coimbatore. | மதிப்பீட்டு விலையை விட 10.00 % அதிகம் | - |
| 2. | தலைமை நீர்த்தேக்கத் நிலையத்தில் உள்ள பம்ப் அறை, நிலத்தடி நீர்த்தேக்கத் தொட்டி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் இதர உள்கட்டமைப்புகளை பழுது பார்த்து மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.12.00 இலட்சம் | திரு.ஜி.முருகன், ஆசாரிபட்டி ரோடு, ஆண்டிபட்டி | மதிப்பீட்டு விலையை விட 6.60 % அதிகம் | மதிப்பீட்டு விலையை விட 4.95 % அதிகம் |
| | | | M/s.ஆகாஷ் கன்சல்டன்சி, 2,நேரூஜி சாலை, தேனி | மதிப்பீட்டு விலையை விட 8.80 % அதிகம் | - |
| 3. | இந்நகராட்சி பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் புதிய மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்தல் | ரூ.15.00 இலட்சம் | M/s.ஆகாஷ் கன்சல்டன்சி, 2,நேரூஜி சாலை, தேனி | மதிப்பீட்டு விலையை விட 6.80 % அதிகம் | மதிப்பீட்டு விலையை விட 4.98 % அதிகம் |
| | | | திரு.S.பாலகிருஷ்ணன் 115/B, வெங்கலா நகர் 1வது தெரு, அல்லிநகரம் | மதிப்பீட்டு விலையை விட 7.20 % அதிகம் | - |
| 4. | இந்நகராட்சி புதைவடிகால் கழிவுநீர் பம்பிங் நிலையத்தில் புதிய 45 ஹெச்.பி. சப்மெர்சிபல் கழிவுநீர் பம்ப் பொருத்தும் பணி செய்தல் | ரூ.25.00 இலட்சம் | Alchem Industries, 32-A, Ooty road, Mettupalayam | மதிப்பீட்டு விலையை விட 4.86 % அதிகம் | மதிப்பீட்டு விலையை விட 4.80 % அதிகம் |
| | | | Sree Power Engineers, 109, Duraisamy layout, Peelamedu, Coimbatore. | மதிப்பீட்டு விலையை விட 10.09 % அதிகம் | - |
| 5. | இந்நகராட்சி புதைவடிகால் பராமரிப்பிற்கு புதிய | ரூ.20.00 இலட்சம் | Frontline Engineering Services, Ist Floor shop no.2, Pariys, | மதிப்பீட்டு விலையை விட 5.80 % அதிகம் | மதிப்பீட்டு விலையை விட 4.98 % அதிகம் |

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் கடிதத்தில் விலை குறைப்பு அளிக்கப்பட்டதன்படி ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|---|
| | அடைப்பு நீக்கும் இயந்திரம் வாங்கும் பணி செய்தல் | | Chennai | | |
| | | | Empire Engineering & Services, Tondiarpet, Chennai. | மதிப்பீட்டு விலையை விட 7.90 % அதிகம் | - |
| 6. | ஜெயராஜ் அன்னபாக்கியம் மகப்பேறு மையத்தில் பழுது பார்த்து மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.15.00 இலட்சம் | திரு.S.பாலகிருஷ்ணன் 115/B, வெங்கலா நகர் 1வது தெரு, அல்லிநகரம் | மதிப்பீட்டு விலையை விட 6.40 % அதிகம் | மதிப்பீட்டு விலையை விட 4.98 % அதிகம் |
| | | | M/s,ஆகாஷ் கன்சல்டன்சி, 2,நேரூஜி சாலை, தேனி | மதிப்பீட்டு விலையை விட 7.20 % அதிகம் | - |

மேற்காணும் ஆறு எண்ணம் பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளதினால், குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு விலை குறைப்பு செய்திட, இந்நகராட்சி மூலம் 14.07.2021ம் தேதிய கடிதங்களின் மூலம் கோரப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களது விலை குறைப்பு கடிதங்கள் அளித்ததன்படி, ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பு கலன் எண்.6ல் குறிப்பிட்டுள்ளபடி மதிப்பீட்டை விட அதிகம் என்ற விலை விகிதத்தில் உள்ளவை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :—

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஆறு எண்ணம் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப ரீதியாக தகுதியாக உள்ளதாகவும், மதிப்பீட்டை விட அதிகம் என்ற விலை விகிதத்திலும் உள்ளது. விலை குறைப்பு செய்து தர கோரப்பட்டதில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ஒப்பந்ததாரர்களது விலை குறைப்பு கடிதங்களின்படி, ஒப்பந்தப்புள்ளி மதிப்பு கலம் எண். 6ல் தெரிவித்துள்ளபடி மதிப்பீட்டை விட அதிகம் என்ற விலை விகிதத்தில் உள்ளது. இப்பணிகளுக்கான மதிப்பீடுகள் 2020—2021 அரசு தரப்படுத்தப்பட்ட பொதுப்பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய துறைகளின் விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளதாலும், குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்ததாரர்களது ஒப்பந்தப்புள்ளி மதிப்பு தொழில் நுட்ப அனுமதி பெற்ற மதிப்பீட்டு தொகைக்குள் உள்ளதாலும், இரண்டாவது அழைப்பில் வரப்பெற்றுள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதால் காலதாமதம் ஏற்படும் என்பதாலும், மேற்படி பெறப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.

(ந.களண். 831/2020/இ1)

**தீர்மான எண்: 1128**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

15. <u>பொருள்</u>:– பெரியகுளம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 2020–21ம் ஆண்டு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்ட நிதியின் கீழ் சாலைப்பணிகள், பொதுக் கழிப்பறை கட்டிடப் பணிகள், புதைவடிகால் பணிகள் மற்றும் குடிநீர் பணிகள் போன்ற அடிப்படை வசதிப் பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( MC2 ) அரசாணை எண். (D) . 40, நாள். 05.02.2021ன்படி ரூ.284.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்ட பணிக்கு 30.06.2021ம் தேதியன்று இரண்டாம் அழைப்பு மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. அதன்படி கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளன.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் கடிதத்தில் விலை குறைப்பு அளிக்கப்பட்டதன்படி ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | இந்நகராட்சி தலைமை நீர்த்தேக்க நிலையத்தில் நீரினை வடிகட்டி சுத்தம் செய்யும் மணல் படுகைகளுக்கு பழுது பார்த்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.3.00 இலட்சம் | Alchem Industries, 32-A, Ooty road, Mettupalayam | மதிப்பீட்டு விலையை விட 4.93 % அதிகம் | மதிப்பீட்டு விலையை விட 4.90 % அதிகம் |
| | | | Sree Power Engineers, 109, Duraisamy layout, Peelamedu, Coimbatore. | மதிப்பீட்டு விலையை விட 10.00 % அதிகம் | - |
| 2. | இந்நகரில் புதிய விரிவாக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய் நீட்டிப்பு செய்தல் | ரூ.5.00 இலட்சம் | திருமதி.எம்.ஷீலா, 47/பி, சீத்தாராம்நகர், வடகரை, பெரியகுளம் | மதிப்பீட்டு விலையை விட 4.97 % அதிகம் | மதிப்பீட்டு விலையை விட 4.95 % அதிகம் |
| | | | திரு.A.S.காஜா முயினுதீன், 7,சவ்வாசு சந்து, வடகரை, பெரியகுளம். | மதிப்பீட்டு விலையை விட 9.50 % அதிகம் | - |
| 3. | இந்நகராட்சி வடக்கு பாரஸ்ட் சாலை குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்தின் சுற்றுச் சுவர் மற்றும் உள்கட்டமைப்புகளை பழுது பார்த்து மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.3.00 இலட்சம் | திருமதி.எம்.ஷீலா, 47/பி, சீத்தாராம்நகர், வடகரை, பெரியகுளம் | மதிப்பீட்டு விலையை விட 5.20 % அதிகம் | மதிப்பீட்டு விலையை விட 4.97 % அதிகம் |
| | | | திரு.A.S.காஜா முயினுதீன், 7,சவ்வாசு சந்து, வடகரை, பெரியகுளம். | மதிப்பீட்டு விலையை விட 7.40 % அதிகம் | - |

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் கடிதத்தில் விலை குறைப்பு அளிக்கப்பட்டதன்படி ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 4. | இந்நகரின் புதிய விரிவாக்கப் பகுதிகளில் புதிய தெருமின் விளக்குகள் (LED) அமைத்தல் | ரூ.10.00 இலட்சம் | M/s. மாருதி டிரேடிங் கார்ப்பரேசன், மதுரை ரோடு, தேனி | மதிப்பீட்டு விலையை விட 5.60 % அதிகம் | மதிப்பீட்டு விலையை விட 4.97 % அதிகம் |
| | | | யோகேஸ் எலக்ட்ரிக்கல்ஸ், தேனி. | மதிப்பீட்டு விலையை விட 6.80 % அதிகம் | - |
| 5. | வைகை அணை சாலை உரக்கிடங்கில் உள்ள வளமீட்பு மையம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை செயலாக்கத்தில் உள் கட்டமைப்புகளில் உள்ள பழுதுகளை சரி பார்த்து மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.5.00 இலட்சம் | திருமதி.எம்.ஷீலா, 47/பி, சீத்தாராம்நகர், வடகரை, பெரியகுளம் | மதிப்பீட்டு விலையை விட 5.40 % அதிகம் | மதிப்பீட்டு விலையை விட 4.96 % அதிகம் |
| | | | திரு.A.S.காஜா முயினுதீன், 7,சவ்வாசு சந்து, வடகரை, பெரியகுளம். | மதிப்பீட்டு விலையை விட 6.50 % அதிகம் | - |
| 6. | பேட்டரியால் இயக்கப்படும் வாகனங்களுக்கு மின் வசதியுடன் ஷெட் அமைத்தல் | ரூ.10.00 இலட்சம் | V.D.G. வேங்கடவா கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், 212, S.M.G. பள்ளி தெரு, விருதுநகர் | மதிப்பீட்டு விலையை விட 5.80 % அதிகம் | மதிப்பீட்டு விலையை விட 4.95 % அதிகம் |
| | | | திரு.A.S.காஜா முயினுதீன், 7,சவ்வாசு சந்து, வடகரை, பெரியகுளம். | மதிப்பீட்டு விலையை விட 9.50 % அதிகம் | - |

மேற்காணும் ஆறு எண்ணம் பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளதினால், குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு விலை குறைப்பு செய்திட, இந்நகராட்சி மூலம் 06.07.2021ம் தேதிய கடிதங்களின் மூலம் கோரப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களது விலை குறைப்பு கடிதங்கள் அளித்ததன்படி, ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பு கலன் எண்.6ல் குறிப்பிட்டுள்ளபடி மதிப்பீட்டை விட அதிகம் என்ற விலை விகிதத்தில் உள்ளவை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :-

மேற்கண்ட ஆறு எண்ணம் பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு விலை குறைப்பு செய்து தர கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர்களது விலை குறைப்பு கடிதங்களின்படி, ஒப்பந்தப்புள்ளி மதிப்பு கலம் எண். 6ல் தெரிவித்துள்ளபடி மதிப்பீட்டை விட அதிகம் என்ற விலை விகிதத்தில் உள்ளது. இப்பணிகளுக்கான மதிப்பீடுகள் 2020–2021 அரசு தரப்படுத்தப்பட்ட பொதுப்பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய துறைகளின் விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளதாலும், குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்ததாரர்களது ஒப்பந்தப்புள்ளி மதிப்பு தொழில் நுட்ப அனுமதி பெற்ற மதிப்பீட்டு தொகைக்குள் உள்ளதாலும், இரண்டாவது அழைப்பில் வரப்பெற்றுள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதால் காலதாமதம் ஏற்படும் என்பதாலும், மேற்படி பெறப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.

(ந.களண். 831/2020/இ1)

**தீர்மான எண்: 1129**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

16. **<u>பொருள்:</u>–** பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான எண்டப்புளி புதுகோட்டையில் உள்ள புல்பண்ணையில் புல் அறுக்கும் உரிமம் மற்றும் பனைமரம், இலவமரம் மகசூல் உரிமத்தினை 2019–2020 முதல் 2021–2022 வரை மூன்றாண்டுகளுக்கு திரு.கே.பரூக் மரைக்காயர் என்பவர் உரிமம் பெற்றுள்ளார். ஏலதாரர் மேற்கண்ட நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கடந்த அக்டோபர் 2019 மாதம் முதல் பெரியகுளம் நகராட்சி சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் புல்பண்ணை முழுவதும் தேங்கி உள்ளதால் விவசாய பணியினை மேற்கொள்ளாததால் மகசூல் எடுக்க இயலவில்லை என மனு செய்துள்ளார். இந்நிலையிலும் 2020–2021ம் நிதியாண்டிற்கான கேட்புத் தொகையினை முழுவதுமாக நிலுவையின்றி செலுத்தியுள்ளார்.

இந்நிலையில் உரிமதாரரின் மேற்படி மனுவின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களால் நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், மேற்படி புல்பண்ணையில் கழிவுநீர் தேங்கி நின்று விவசாயம் செய்வதற்கோ, மகசூல் எடுப்பதற்கோ இயலாத நிலையில் உள்ளதாக பொறியாளர் மற்றும் ஆணையாளரால் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது. பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி மேற்கண்ட கழிவுநீர் வெளியேற்ற பொறியியல் பிரிவு மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருவதாகவும், மேலும் இப்பணியினை முடிவு பெற அக்டோபர் 2021 மாதம் ஆகும் என குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்படி குறிப்பின் அடிப்படையில் 01.04.2021 முதல் மேற்படி கழிவுநீரை வெளியேற்றி விவசாயம் செய்திட உகந்த சூழ்நிலை ஏற்படும் வரை அக்காலகட்டத்திற்கான புல்பண்ணையில் புல் அறுக்கும் உரிமம் மற்றும் பனைமரம், இலவமரம் மகசூல் உரிமத்தின் கேட்பினை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :–

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2652/2018/அ2)

**தீர்மான எண்: 1130**

**தீர்மானம்** : இடத்தினை தல ஆய்வு செய்யப்பட்டது. மன்ற குறிப்பு விவரங்கள் பதிவு செய்யப்பட்டது. பொருளில் குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களுக்கான கேட்பு 1.4.2021 முதல் குறைகள் நிவர்த்தி செய்யும் வரை தற்காலிகமாக கேட்பு நீக்கம் செய்துக் கொள்ள மன்ற குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

17. <u>பொருள்:</u>– பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய பேருந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை 2021–2022 முதல் 2023–2024 வரை திரு.ஆ.மருதைதுரை செல்வம் என்பவர் உரிமம் பெற்றுள்ளார்.

மேற்படி பேருந்து நிலையத்தின் உரிமம் 20.03.2020 உடன் முடிவு பெற்று விட்டதால், மேற்படி உரிமத்தினை புதுப்பித்து வழங்க வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மேற்படி கோப்பு நடவடிக்கையில் இருந்தது. இந்நிலையில் கொரோனா காலகட்டம் என்பதாலும், பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான காய்கறி மார்க்கெட் பேருந்து நிலையத்திற்குள் செயல்பட்டு வந்ததால் புதுப்பித்து வழங்கிட காலதாமதம் ஏற்பட்டது. தற்பொழுது, மேற்படி பேருந்து நிலையத்தின் உரிமம் (20.03.2020 முதல் 19.03.2023 வரை) 23.06.2021ல் புதுப்பித்து வழங்கப்பட்டுள்ளது. ஆதலால் 23.06.2021 முதல் பேருந்துக்கான நுழைவு கட்டணத்தினை இந்நகராட்சி ந.க.எண்.2652/2018/அ2 நாள்.23.06.2021ல் வருவாய் ஆய்வாளருக்கு மூலம் அலுவலக வசூல் மேற்கொள்ள ஆணையிடப்பட்டது.

ஆனால், வருவாய் ஆய்வாளரின் குறிப்பின்படி கொரோனா காலகட்டம் என்பதால் பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான காய்கறி மார்க்கெட் பேருந்து நிலையத்திற்குள் செயல்பட்டு வந்தததாலும், பேருந்துகள் இயக்கப்படாத காரணத்தினாலும் பெரியகுளம் நகராட்சி பேருந்து நிலையத்திற்குள் பேருந்துகள் வராமல் புறவழிச்சாலை வழியாக சென்று வந்தது எனவும், மேலும் 30% சதவீதத்திற்குள் கீழே பேருந்துகள் இயக்கப்பட்டு அப்பேருந்துகளும் நகர்பகுதியினுள் வராமல் புறவழிச்சாலை வழியாக சென்று வந்ததால் 23.06.2021 முதல் 18.07.2021 வரை (28 தினங்கள்) நுழைவு கட்டணம் வசூலிக்க இயலவில்லை என்று அறிக்கை வழங்கியுள்ளார்.

வருவாய் ஆய்வாளரின் குறிப்பின்படி, பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான காய்கறி மார்க்கெட் பேருந்து நிலையத்திற்குள் செயல்பட்டு வந்தததாலும், பேருந்துகள் இயக்கப்படாத காரணத்தினாலும் 23.06.2021 முதல் 18.07.2021 வரை (28 தினங்கள்) நுழைவு கட்டணம் வசூலிக்க இயலவில்லை. எனவே அந்த கால கட்டத்திற்கான நுழைவு கட்டணத்தினை இரத்து செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :–

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2652/2018/அ2)

**தீர்மான எண்:** 1131
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) ர. அசோக்குமார்
தனி அலுவலர்

/உண்மை நகல்/

ஆணையாளர்
பெரியகுளம் நகராட்சி